11.04.2026 O.S. 224/2019 வா.சா.1 சங்கரேஸ்வரன்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை

வா.சா.ஆ 52 ஆவணமானது நோட்புக்கில் 8 வது பக்கத்தில் உள்ள தீர்மானம் என்றால் சரிதான். அந்த நோட்புக்கில் மற்ற தீர்மானங்களை பொறுத்து தேதி எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ 52 ல் தேதி இல்லை என்றால் சரியல்ல. தீர்மான புத்தகத்தில் இடைவெளி விட்டு பக்கங்கள் விட்டு எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவ்வாறு இடைவெளி விட்ட பக்கத்தில் வழக்கிற்கான தீர்மானத்தை எழுதி கொண்டோம் என்றால் சரியல்ல. தீர்மானத்தில் செயலர் என்ற என் கையெழுத்து ஆங்கிலத்தில் உள்ளது என்றால் சரிதான். கையெழுத்து மைபேனாவினாலும், தேதி பால்பயிண்ட் பேனாவினாலும் எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த வழக்கு 2019 ம் ஆண்டு மே மாதம் விடுமுறை கால நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த தீர்மானம் 4.9.2019 ம் தேதி இயற்றப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்து 4 மாதங்கள் கழித்து வா.சா.ஆ 52 தீர்மானம் இயற்றப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ 52 ல் வழக்கு எண் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ 52 ல் கதவு எண் சொல்லப்படவில்லை என்றால் சொல்லப்பட்டுள்ளது. பழைய வழக்கு எண் என்பது இந்த வழக்கு ஆகும். புதிய வழக்கு என்பது அ.வ.எண்.88/2020 என்று முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில்நிலுவையில் உள்ளது. தீர்மானத்தை வழக்கில் குறிப்பிட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக சொல்லப்படவில்லை என்றால் சரிதான். டிரஸ்ட் ஆரம்பிக்கும் போது ரூ.1000/ம் உள்ளதாக மட்டுமே சொல்லப்பட்டுள்ளது என்றும், டிரஸ்டிற்கு சொத்து இருந்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான். சொத்தை பற்றி சொல்லவில்லை. இந்த சொத்தை டிரஸ்டுடன் சேர்க்கப்பட்டுள்ளதா என்றால்

இல்லை. நீதிமன்றத்தில் வழக்கு இருப்பதால் சேர்க்கவில்லை. என்னிடம் காண்பிக்கப்படுவது தென்காசி முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்ற அ.வ.எண்.88/2020ல் மூ.த.சா.ஆ 2,3 ஆக குறியீடு செய்யப்பட்ட ஆவணங்கள் என்றால் சரிதான். அந்த 16.4.2019 தேதியில் சந்திரா என்பவருக்கு ராஜ் என்பவர் எழுதிகொடுத்த கிரையம் ஆவணம் மற்றும் எங்களது வகையறா எழுதிக்கொண்ட கிரைய ஒப்பந்த மறுத்தளிப்பு ஆவணம் ஆகும். அந்த ஆவணம் பி.வா.சா.ஆ 7 ஆகும். பி.வா.சா.ஆ 7 சொல்லப்பட்ட ஒப்பந்தமானது ஏ.ஆர்.எஸ்.ராமலிங்கம் முதலியார் மக்களிடம் இருந்து நாங்கள் தாவா சொத்து உள்ளிட்ட கூடுதல் சொத்து கிரையம் வாங்க ஏற்படுத்தி கொண்ட ஒப்பந்தம் என்றால் சரிதான். அந்த ஒப்பந்தத்தை சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்ய மறுத்துவிட்டார் என்றால் சரிதான். சரியான காரணம் சொல்லப்படவில்லை. அந்த ஒப்பந்தத்தை பதிவு செய்ய வேண்டும் என உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தோம் என்றால் சரிதான். அந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். கிரைய ஒப்பந்த எழுதிய நபர்களிடம் இருந்து கிரையம் ஆவணம் எழுதி வாங்கினோம் என்றால் அவர்களது வாரிசுகளிடம் இருந்து கிரையம் ஆவணம் எழுதி வாங்கினோம். அந்த சொத்துக்கள் ஏ.ஆர்.எஸ். ராமலிங்கம் சொத்துக்கள் என ஒப்புக்கொண்டு கிரையம் வாங்கினோம் என்றால் சரிதான். அந்த ஆவணம் தற்போது வரை முடிவுறா ஆவணமாக உள்ளது என்றால் சரிதான். அந்த ஆவணம் வில்லங்க சான்றிதழில் துலங்காது என்றால் சரிதான். தீர்மானம் இல்லாமல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் வழக்கு செல்லாது என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் உரிமையும், அனுபவமும் இல்லை என்றால் சரியல்ல.

(ஒம்)எஸ்.முருகவேல்,<br>
கூடுதல் சார்பு நீதிபதி (முழு பொ)<br>
தென்காசி.